A|L DAY CLASS
Chemistry - Mr. செல்வா
Physics - Mr. நந்தகுமார்
Botany - Mr. இங்கா நேசன்
Zoology - Mr. நரேன்
Pure Maths Applied Maths - Mr. ஆறுமுகம்
ஆரம்பம் 9-12-85
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
விலை ரூ. 1/=

A|L சனி - ஞாயிறு வகுப்புகள்
Chemistry - Mr. மகாதேவா
Physics - Mr. நந்தகுமார்
Botany - Mr. இங்கா நேசன்
Zoology : Mr. நரேன்
Pure Mates Applied Maths - Mr. ஆறுமுகம்
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ கார்த்திகை மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 29 (12-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 16

★ இனப்பிரச்சினை:

# அரசியல் தீர்வு முயற்சி ஏப்ரல் வரை நீடிக்கும்

## இந்தியாவே சமரசத் திட்டத்தை தயாரிக்கும் நிலை உருவாகும்

சென்னை, டிச. 11

இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை இந்தியா நீடிக்கும். புதுடில்லியிலிருந்து இங்கு கிடைத்த தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசும் தமிழர் அமைப்புகளும் சேர்ந்து சமரசத் தீர்வு ஒன்றைக் காண இயலாவிடில், இந்திய அரசே ஒரு சமாதானத் திட்டத்தைத் தயாரிக்கும் எனவும் டில்லி அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தயாரித்த செயல் திட்டத்துக்கு மாற்றுக் கூட்டணி சமர்ப்பித்த யோசனைகளை பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதியுடன் கடந்த வாரம் டாக்காவில் விவாதித்தார்.

அந்த யோசனைகளை இலங்கை அரசு பரிசீலனை செய்யவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது.


இலங்கை அரசின் பதில் கிடைத்ததும் அதனை இந்தியா பரிசீலனை செய்யும். அந்தப் பதில், தமிழர் அமைப்புகளுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லாவிடில் —

அரசு, கூட்டணி யோசனைகள் இரண்டையும் உள்ளடக்கும் விதத்தில் இந்தியாவே புதிய சமரசத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்.

பின்னர் அந்தத் திட்டத்தை இலங்கை அரசிடம் சமர்ப்பித்து அதனை அமுல் செய்யுமாறு நிர்ப்பந்திக்கும்.

இப்படி ஒரு நிலைமை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில்தான் ஏற்படும் என இந்திய லோக சபை, மற்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இந்தியா சமரசத் திட்டத்தை தயாரிக்க முன்னர் தமிழர் அமைப்புகளை மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கும் எனவும் தெரிய வருகிறது.



எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்துவிடப்படவுள்ள மகாதேவா தாம்போதியைப் படத்தில் காணலாம். 2640 அடி நீளமான இத்தாம்போதி 1 கோடி 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால முயற்சிக்குப் பலன்

## மகாதேவா தாம்போதி

### அடுத்த திங்கள் பாவனைக்கு

### பாலம் அமைக்கும் வேலை மிச்சம்

— அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், டிச. 12

மகாதேவ தாம்போதி, பொதுமக்கள் பாவனைக்காக இம்மாதம் 16 ஆம் திகதி முதல் திறந்துவிடப்பட இருக்கின்றது. அன்று திறப்பு விழா என்று எதுவும் இடம் பெறாது. குத்துவிளக்கு ஏற்றுதலும், ஐந்து சவுக்கு மரக்கன்றுகள் நடுதலும் மட்டுமே அன்றைய தினம் இடம் பெறும்.

1955 ஆம் ஆண்டில் இருந்து இழுபட்டு வந்த இந்தத் தாம்போதி வேலைகள் முடிவடைந்தாலும் 660 அடி நீளமான பாலம் நிர்மாணிக்கப்படவேண்டி உள்ளது.

தாம்போதியின் முழுப் பயனையும் மக்கள் அடைய வேண்டுமானால், இந்தப் பாலம் நிறுவப்பட்டாக வேண்டும்.

தாம்போதி வேலைகள் 1 கோடி 15 லட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டன.

வடபகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாவை வழங்கினார்கள்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு, தனது நிதியில் 15 லட்சம் ரூபாவை இதற்கு வழங்கியது.

1955 இல் இருந்து இழுபட்டுவந்த இந்த வேலைகள் விரைவாக நிறைவேற்றப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணன்.

மக்களின் சக்தியையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் கொள்ளை

மட்டக்களப்பு டிச. 12.

மட்டக்களப்பு நகரின் பிரதான தண்ணீர்த் தாங்கிப் பகுதியில் உள்ள களஞ்சியம் சூறையாடப்பட்டது.

சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை போயின.

நேற்று முன்தினம் (செவ்வாய்க் கிழமை) இரவு 10.30 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

ஆயுத பாணியாக புகுந்த 15 இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள்.

### அதிகாலை குண்டு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 12

இன்று அதிகாலை 1-10 மணிக்கு பலத்த குண்டு வெடிப்பு சத்தம் ஒன்று யாழ் நகரில் கேட்டது.

அதைத் தொடர்ந்து கோட்டைப் பக்கத்தில் இருந்து சில வெடிச் சத்தங்கள் கேட்டன.

### நீச்சல் தடாகத்தில் திருமணம்

கோலாலம்பூர், டிச 11

நீச்சல் தடாகத்தினுள் இருவர் திருமணம் செய்து கொண்டனர்.

பதினொரு அடி ஆழத்தில் திருமணம் செய்து கொண்ட இருவரும் சுழியோடிகள்

மலேஷியாவில் இந்த சம்பவம் நடந்தது. மணமகன் பெயர் அன்டி ஒங் மணமகள் பெயர் ஜோன்லியொங்.

நீருக்குள் இருந்த 20 சுழியோடிகள் திருமணத்தைப் பார்வையிட்டனர்.

வெளியில் இருந்த 200 விருந்தாளிகள் பார்வையிட்டனர்.

தம்பதிகள் நீருக்குள் இருந்த வண்ணம் பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட எழுதுதாளில் கையொப்பமிட்டனர். மோதிரம் மாற்றிக் கொண்டனர். முத்தமும் பரிமாறிக் கொண்டனர்

## கிளிநொச்சியில் இராணுவ முகாம் விஸ்தரிப்பு

கிளிநொச்சி டிச. 12

கிளிநொச்சி இராணுவ பொலீஸ் கூட்டு முகாமுக்கு முன்பாக உள்ள நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் விடுதி, பொறியியலாளர் விடுதி, யோகர் சுவாமி திருவடி நிலை ஆகியன கடந்த 10 ஆம் திகதி முதல் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவ பொலீஸ் கூட்டு முகாமுக்கு முன்பாக இவை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவ கவசவாகனங்கள் இங்கு நிறுத்தப்பட்டுள்ளன. படைவீரர்களும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமை விஸ்தரிக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியின் அலுவலகமும் இங்கு அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து கிளிநொச்சி பிரதான தபால் நிலையம், நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றை வேறு இடங்களுக்கு மாற்றவேண்டிய நிலை எழுந்துள்ளது.

உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் மேற்கூறிய அலுவலகங்களுக்குச் செல்ல அச்சம் கொண்டுள்ளனர்.

## காங்கேசன் சம்பவம்

## ரயில் பெட்டிகளை இராணுவம் எடுத்தது

காங்கேசன்துறை, டிச 12

காங்கேசன்துறையில் கடத்தப்பட்ட ரயில் எஞ்ஜின் பெட்டிகளை இராணுவத்தினர் சிமெந்துத் தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

செவ்வாய் இரவு 7 மணியளவில் கடத்தல் நடந்த இடத்திற்கு இராணுவத்தினர் வந்து சேர்ந்தனர்.

கடத்தப்பட்ட 'வகன்'களில் ஒன்றில் மட்டும் பொருள்கள் சூறையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிக் கடைகள் இழுத்து மூடப்பட்டன.

மக்கள் பதறி அடித்துக் கொண்டு வேறிடங்களுக்குச் சென்றனர்.

# கூட்டணி யோசனை அரசு தீவிர ஆய்வு

கொழும்பு, டிச. 12

இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனைகளை இலங்கை அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

அரசாங்க உயர்மட்டத்தில் இந்த யோசனைகள் குறித்து பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பான நடவடிக்கைகளில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா முக்கியமாக ஈடுபட்டு வருகிறார்.

அந்த அலுவல்களுக்கு நடுவிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி யோசனைகள் குறித்து அவர் பரிசீலனை செய்துவருவதாகவும் அறியவந்துள்ளது.

### முச்சந்தி முரளி



ஓம், ஓம் அவர் அங்காலை வாங்கி எல்லாத்தையும் இஞ்சாலை குடுப்பார் போலை. அவற்றை மீசையையும் சிரிப்பையும் பார்த்தால் அப்பிடித் தானிருக்கு.

## யாழ்ப்பாணத்தில் தனி நாடாளுமன்றம் ஏன் ஏற்படுத்த முடியாது ?

### முஸ்லிம் முன்னணிக் கூட்டத்தில் தஹா

கொழும்பு, டிச 12

ஈராக் நாட்டின் வடபகுதியில் உள்ள குர்டிஷ் இன மக்களுக்கு தனி நாடாளுமன்றம் ஒன்றையே அந்த நாட்டின தலைவர் ஏற்படுத்திக் கொடுத்து உள்ளார்.

அதே போன்று வடபகுதித் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் தனி நாடாளுமன்றம் ஒன்றை நாம் ஏன் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது.

இப்படிக் கேள்வி எழுப்பினார், முதுபெரும் அரசியல்வாதியும் முன்னாள் பிரதமரும் காலி எம். பியுமான டாக்டர் விஜயானந்தா தஹநாயக்கா.

கொழும்பில் செவ்வாய் இரவு நடந்த இலங்கை முஸ்லீம் வாலிப முன்னணிக் கூட்டத்தில் டாக்டர் தஹநாயக்கா பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இந்த நாட்டில் மூன்று அரசாங்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒன்று, மட்டக்களப்பில் ஒன்று கொழும்பில் ஒன்றும் ஆக மூன்று நாடாளுமன்றங்கள் இயங்க வேண்டும்.

#### கோரிக்கைகள் நியாயமானவை

தமிழருக்கு இரண்டு மூக்குகள், முஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியைச் சேர்ந்த 8 பேர் நேற்று கோட்டையிலிருந்து விடுவிப்பு

நல்லூர், டிச 12.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து மேலும் எட்டு இளைஞர்கள் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

விடுவிக்கப்பட்ட எட்டு இளைஞர்களினதும்பெயர்களும் வருமாறு:-

கிருஷ்ணபிள்ளை பரமநாதன், போல் சின்னப்பன் ஜேசுதாசன், சின்னக்கண்ணு துரைசுவாமி, கதிரவேலு நாகப்பா, சண்முகம் கோபாலகிருஷ்ணன், சின்னகந்தா முத்துலிங்கம், பொன்னுத்துரை திருஞானசோதி, சண்முகம் கிருஷ்ணகுமார்.

# இலங்கைக்கு எல்லா உதவிகளும்செய்வேன்

---ஸியா உறுதி

கொழும்பு, டிச. 12

இலங்கை மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் எவை என்பது எமக்குத் தெரியும். அவர்களுக்கு எம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.



இப்படி உறுதியளித்திருக்கிறார் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா உல் ஹக்.

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு நேற்று கண்டி மாநகர சபை வரவேற்பளித்து கௌரவித்தது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இப்படி உறுதியளித்திருக்கிறார்.

பௌத்த புராதன சின்னங்களைப் பார்வையிட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி பௌத்த கலாசாரம் தம்மை வெகுவாக கவர்ந்திருப்பதாகத் தெரிவித்தார்.

கண்டி மேயரையும் அவரது சகாக்களையும் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும்படி அவர் அழைப்பு விடுத்தார்.

### அரசியல்வாதிக்கு இந்தக் கதி!

கொழும்பு, டிச. 12

குருநாகல் பகுதியைச் சேர்ந்த சிங்கள அரசியல்வாதி ஒருவருக்கு தற்பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கி பொலீஸாரினால் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இவருக்கு எதிராகக் கிடைத்த பல புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கை.

இந்த அரசியல்வாதிக்கு எதிராக ஐ. தே. கட்சி உயர்மட்டத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இவருக்கு எதிராக பொலிஸிலும் சில முறைப்பாடுகள் பதியப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ ஆட்சிக்கு பாகிஸ்தான் முழுக்கு!

### ஜனவரியில் நிச்சயமாம்

கொழும்பு, டிச. 12

அடுத்த ஜனவரி முதலாம் திகதி பாகிஸ்தான் முழுக்க முழுக்க ஜனநாயக நாடாக இருக்கும்.

இப்படி உறுதியளித்திருக்கிறார் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா-உல் ஹக்.

ரூபவாஹினிக்கு அவர் நேற்று அளித்த பேட்டியிலேயே இப்படி உறுதியளித்திருக்கிறார்.

"ஜனநாயகத்தை நசுக்கிய இராணுவ ஆட்சியாளர் என்று சரித்திரம் உங்களை வர்ணிக்கக் கூடும். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என்று எழுப்பப்பட்ட வினவுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

12 - 12 - 1985

வியாழக்கிழமை

சுபநேரம்: 7-50 முதல் 9.20வரை

ராகுகாலம்: 1-50 முதல் 3-20வரை.

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## 'கூப்பிடு தேங்காயை!' என் காதில் ஒலிக்கிறது

தினசரி சினிமா

தமிழ்ப்பட உலகின் ஹாஸ்ய நாயகன் தேங்காய் சீனிவாசன். எழுநூறு படங்களுக்கு மேல் நடித்து முடித்துவிட்டவர் அவர்.

தனது படவுலக அனுபவம் பற்றிக் குறிப்பிடும்போது அவர் கூறியதாவது:-

''ஒருமுறை தேவர் பிலிம்ஸ் படத்தின் படப்பிடிப்பு பழனியில் நடந்தபொழுது மற்றொருபடப்பிடிப்பில் ஏற்பட்டவிபத்தினல் காலில் காயமுற்று வீட்டில் படுத்துக்கிடந்தேன்.

என்னுல் படம் தாமதமாகும் நிலை ஏற்பட்டது. எனக்குப்பதிலாக வேறு ஒருவரை அந்தக் காட்சியில் நடிக்க வைத்துவிடலாம் என்று சிலர் தேவரிடம் யோசனை சொன்னார்களாம்.

ஆனல்அவர் அந்தயோசனையை ஏற்றுக்கொள்ளாமல், ''தேங்காய் இல்லாமல் படமா?'' என்று கூறிவிட்டு, என் வீட்டிற்கு விரைந்துவந்தார். அடிபட்டிருந்த முழங்காலின்மீது விபூதியைத் தடவி 'முருகா' என்று உருக்கமாகக் கூவினர்.

ஒருசில நிமிடங்களில் நான் புத்துணர்ச்சி பெற்று, புதிய பலத்தோடு படப்பிடிப்புக்குத் தயாராகிவிட்டேன்.

அவருடன் அன்றே பழனிக்குப் புறப்பட்டுச் சென்று கர்ப்பூர வியாபாரியாக அந்தப் படத்தில் வெற்றிகரமாக நடித்து முடித்தேன்.

தேவர் காலத்திற்குப் பிறகு அவரது மகன் தண்டாயுதபாணியும், மருமகன் தியாகராஜனும் அதே அன்பை இன்றும்தொடர்ந்து காட்டி வருகிறார்கள்.

எந்தப் புதுப்பட அறிவிப்பு வந்தாலும் தேவர் சம்பிரதாயப்படி, 'கூப்பிடு தேங்காயை!' என்றுதான் அவர்களும் குரல் கொடுத்து வருகிறார்கள்.

எனது படவுலக முன்னேற்றத்துக்கு இவர்கள் பக்கபலமாக நின்றுஉதவி வருகிறார்கள்' என்றார்.

## தமிழ் நாட்டில்

# அடையாள வேலை நிறுத்தம் வெற்றி

### அத்தியாவசிய சேவைகள் பாதிப்படைந்தன

சென்னை, டிச. 11

தமிழ்நாட்டில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அடையாள வேலைநிறுத்தம் கூடிய அளவில் வெற்றி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஆசிரியர்கள் மீனவர்களின் உரிமைகள் மீது அரசு அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கெதிராக இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தி. மு. க. தலைமையிலான முற்போக்கு தொழிற்சங்க சம்மேளனம், உழைக்கும் மக்கள் சபை, தொழிற்சங்க ஊழியர்காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களே இந்த அடையாள வேலைநிறுத்தத்திற்கான அழைப்பை விடுத்திருந்தன.

ஆசிரியர்களின் 10 அம்சத்திட்ட கோரிக்கைகளுக்காதரவாகவும் அண்மையில் மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அனுதாபம்தெரிவித்தும் இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது.

கடைகள் பல அடைக்கப்பட்டிருந்ததாகவும், மக்கள் நடமாட்டமும் வீதிகளில் வாகனப் போக்குவரத்தும் வெகுவாகக்குறைந்தும்காணப்பட்டது.

இதனுல் அத்தியாவசிய சேவைகள் பலவும் பாதிப்படைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைத் தமிழருக்கு

### ராஜ்ய சபை எதிர்க்கட்சி உறுப்பினர் முழு ஆதரவு

புதுடில்லி, டிச. 11

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்கு இந்திய ராஜ்ய சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

சரியான இடத்தில் இது பற்றி குரல் கொடுப்போம் என்றும் உறுதியளித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, இனப் படுகொலையில் இருந்து ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கும் இயக்கம் (புரொடெக்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவிடம் இந்த உறுதி மொழிகள் அளிக்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மூதூர் முன்னுள் எம்பி. திரு. அ. தங்கத்துரை, புரொடெக் இயக்கத்தின் சார்பில் திரு. செ. சந்திரகாசன் ஆகியோர் அடங்கிய தூதுக் குழுவே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்தது.

இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைமை பற்றியமகஜர் ஒன்றையும் தூதுக்குழு கையளித்தது.

யுத்தநிறுத்த நிபந்தனைகளை மீறுவதில் தான் அக்கறை காட்டப்படுகின்றதே ஒழிய அமுல் நடத்துவதில் அல்ல என்றும் தூதுக்குழு சுட்டிக்காட்டியது.

தூதுக்குழு சந்தித்த ராஜ்ய சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விவரம் வருமாறு: எம். எஸ். குருபாதஸ்வாமி(ஜனதா) எஸ். டபிள்யூ. டாபே, சுரேஷ் கல்மதி (காங்கிரஸ்-எஸ்), கே. மோகனன் (மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்), பி. உபேந்திரா (தெலுங்குதேசம் கட்சி), எஸ். பி. மாளவியா (லோக்தள்), வி. கோபாலசுவாமி (திராவிடமுன்னேற்றக் கழகம்)

## வெளி உலகில்

### ஆச்சரியமான உயிர் பிழைப்பு

மாஸ்கோ டிச. 11

பல கிலோ மீட்டர் உயரத்தில் விமானத்திலிருந்து விழுந்து விபத்துக்குள்ளான பெண் ஆச்சரியமான முறையில் உயிர் பிழைத்துள்ளார்.

ரஷ்யாவில் ஆறு ஆண்டுகளுக்கு முன் இப்படியொரு விபத்துக்கு இலக்கானவர் இந்தப் பெண்.

கட்டுப்பாட்டை இழந்துபோன அவரது சிறிய விமானத்திலிருந்து விழுந்த அவர் மூன்று நாட்களின் பின்பே மீட்கப்பட்டார். கைகளும் விலா எலும்புகளும் முறிந்த நிலையில் நினைவிழந்து கிடந்தார்.

டாக்டர்களின் சந்தேகத்தையும் பொய்ப்பித்து குணமடைந்து விட்டார்.

## தெ. ஆ. விடுதலை இயக்கத் தலைவர்

### நெல்சன் மன்டெலாவை விடுவிக்க பிரான்ஸ் முயற்சி

#### அரசியல் புகலிடம் கொடுக்கவும் ஆயத்தமாக இருப்பதாக தகவல்

பிறிட்டோறியா டிச11

தென் ஆபிரிக்க விடுதலை இயக்கத் தலைவர் நெல்சன் மன்டெலாவை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை பிரான்ஸ் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் ஆபிரிக்க அரசுடன் பிரான்ஸ் மன்டெலாவை விடுவிப்பது தொடர்பாக தொடர்பு கொண்டிருக்கிறது.

திரு.மன்டெலாவுக்கும் அவரது மனைவிக்கும் அரசியல் புகலிடம் கொடுக்கவும் பிரான்ஸ் ஆயத்தமாக இருக்கிறது.

இந்த முயற்சி தொடர்பான விடயத்தை தென் ஆபிரிக்க தகவல் வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'தஸ்டார்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தலைவர் நெல்சன் மன்டெலா தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவிக்கிறர்; நிபந்தனையோடு கூடிய விடுதலையையும் அவர் தொடர்ந்து மறுத்தே வருகிறர்.

### வளைகுடா யுத்தம்

ரியாட், டிச. 11

வளைகுடா யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவருவதுகுறித்து சவூதி அரேபியா, ஈரானுடன் பேசஉள்ளது.

ஈரானின் வெளிநாட்டு அமைச்சர் அலிஅக்பர் வேலாயதி சவூதிஅரேபியா வரும்பொழுது, ஈராக் — ஈரான் யுத்தம் பற்றிப் பேச இருப்பதாக சவூதி அரேபிய வெளிநாட்டமைச்சர் சவுட் அல்-பைசல் இளவரசர் சொன்னுர்.

## நிக்கரகுவா

# கிளர்ச்சியாளர்களுக்கு அமெ. இராணுவ உதவி

### காங்கிரஸிடம் அனுமதி கோருகிறர் றேகன்

வாஷிங்டன் டிச. 11

நிக்கரகுவா அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தும் கெரில்லாக்களுக்கு இராணுவ உதவி அளிக்க மீண்டும் அமெரிக்க ஜனதிபதி றேகன் முனைவந்திருக்கின்றர்.

அமெரிக்ககாங்கிரஸின் அனுமதியை இதற்காகப் பெறுவதற்கு அதிபர் றேகன் தீர்மானித்து இருப்பதாக 'நியூஸ்வீக்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

துவக்குகள், ஏவாயுதங்கள் முதலியவற்றை கெரில்லாக்களுக்குஅனுப்பவே அதிபர் றேகன் தீர்மானித்துள்ளார்.

கடந்த முறையும் அதிபர் றேகன் காங்கிரஸின் அனுமதியைக் கோரியிருந்தார்.

'இராணுவ உதவி செய்ய முடியாது. மனிதாபிமான உதவிகளை வேண்டுமானுல் அனுப்பலாம்-' என்று காங்கிரஸ் றேகனுக்குக் கூறி இருந்தது.

### ரஷ்யாவிலும் 'எய்ட்ஸ்' நோய் கண்டுபிடிப்பு

மாஸ்கோ, டிச 11

ரஷ்யாவிலும் எய்ட்ஸ் நோய் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எத்தனை பேரை 'எய்ட்ஸ்' பீடித்துள்ளது என்று கேட்டபோது,

இரண்டு கைவிரல் களுக்குள்ளும் அந்த எண்ணிக்கை அடங்கிவிடும் என்று ரஷ்ய வைத்தியத் திணைக்கள இயக்குநர் விக்ரர் ஸாடனேவ் சொன்னுர்.

1970இல் மேற்கு நாடுகளில் இடம்பெற்ற பாலியல் புரட்சிதான் எய்ட்ஸ் பரவக் காரணம் என்று இவர்குற்றஞ்சாட்டினுர்.

### 'நாஸா' தலைவர் பதவி நீக்கம்

வாஷிங்டன் டிச.11

அமெரிக்க விண்வெளி ஸ்தாபனத்தின் (நாஸா) தலைவர் திரு. ஜேம்ஸ் பெக்ஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

1970 இல் இவர் பாதுகாப்பு அமைச்சில் பணியாற்றினுர். அச் சமயம் இவர் மோசடிச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டு இருந்தாராம். அது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, அமெரிக்க ஜனதிபதி திரு. றேகன் அவரைப் பதவி நீக்கம் செய்தார்.

## பிலிப்பீன்ஸ் ஜனதிபதிதேர்தல் மூவர் போட்டி

மணிலா டிச. 11

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி தேர்தலில் மூன்று பேர் போட்டியிடுவர்.

தற்போதைய ஜனதிபதி பெர்டினன்ட் மார்கோஸ்

கொலை செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரின் மனைவிதிருமதி கோரஸன் அகியுனே ஆகியோருடன் மூன்றுவதாகஐக்கிய தேசிய ஜனநாயக அமைப்பின் சார்பில் சல்வடோர் லோறல் என்பவரும் போட்டியிட முன்வந்துள்ளார்.

## இந்திரா கொலை வழக்கு

# பிரதமர் ராஜீவும் சோனியாவும் சாட்சியமளிக்க வேண்டும்

### சமன்ஸ் விடுக்க விண்ணப்பம் விசேட நீதிபதி நிராகரிப்பு

புதுடில்லி, டிச. 11

இந்திராகாந்தி கொலை வழக்கில் சாட்சியம் அளிக்க பிரதமர் ராஜீவ் காந்தி ஜனதிபதி ஜெயில்சிங், திருமதி சோனியா காந்தி ஆகியோருக்கு சம்மன்ஸ் அனுப்ப வேண்டும் என்று விடுக்கப்பட்ட விண்ணப்பத்தை, விசேட நீதிபதி நிராகரித்தார்.

எதிரி தரப்பினர் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து இருந்தனர். விசேட நீதிபதி திரு. மகேஷ்சந்திரா வழக்கு விசாரணையை நடத்துகின்றர்.

விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. ''பிரதமர், ஜனதிபதி ஆகியோர் உட்பட 34 பேரைச் காட்சிகளாக அழைக்கவேண்டும் என்று எதிரி தரப்பினர் கேட்டுள்ளது விசாரணையை இழுத்தடிக்கவே''— என்று எதிரி தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்துத் தீர்ப்பு அளிக்கையில் நீதிபதி தெரிவித்தார்.

இந்திரா காந்தியைக் கொலை செய்ததாக மூவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது.

### முன்னைய இயக்குநர் சபை மீண்டும் கைப்பற்றியது

அச்சுவேலி, டிச. 12

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தை முன்னைய இயக்குநர் குழு மீண்டும் கைப்பற்றியது.

வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் குழுவைத் தெரிந்தெடுப்பதற்கான பொதுச் சபையின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இயக்குநர் சபைக்கான தேர்தல் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தேர்தலில் வெற்றி பெற்றோர் விவரம்:

திரு. தி. கமலநாதன், திரு. வ. திருஞானசம்பந்தர், திரு.மு. தர்மலிங்கம், திரு. கு. முத்துக்குமாரசுவாமி, திரு. த. செல்வரத்தினம், திரு. பொ. இராசதுரை, திரு. வி. சிவபாலன்.

## பம்பாய் 'மும்பாய்' ஆக்கப்படமாட்டாது

### இந்திய உள்துறை அமைச்சர்

புதுடில்லி, டிச 12

'பம்பாய்' நகரின் பெயர் 'மும்பாய்' பம்பாய் அல்ல. இப்படி இந்திய நாடாளுமன்றத்தில் கூறப்பட்டது.

''பம்பாயின் பெயரை மும்பாய் என்று மாற்றப்படவேண்டும் என்ற யோசனையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை''—இப்படி உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னுர்.

இயன்ற அளவு இடங்களின் சரித்திரப்பிரசித்தி பெற்ற பெயர்களை நாம் மாற்றக்கூடாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

''இந்திய அரசியல் சட்டத்தின் ஹிந்து பதிப்பில் பம்பாயின் பெயர் 'மும்பாய்' என்றுதான் உள்ளது'' என்று திரு. அனூம்சந்த்ஷா கூறியபோது

''இந்திய அரசியல் சட்டத்தின் அதிகாரபூர்வமான ஹிந்திப் பதிப்பு இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது – என்று அமைச்சர் பதிலளித்தார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### வட இலங்கை சங்கீத சபை பரீட்சை ஏப்ரலில்

#### 1981 பாடவிதானங்களுக்கு அமைய

வட இலங்கைச் சங்கீத சபையினுல் 1986 ஆம் ஆண்டு நடத்தப்படவிருக்கும் சங்கீதம், மிருதங்கம், நடனம், பண்ணிசை, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் யாவும் 1981 ஆம் ஆண்டு வெளியாகிய பாடவிதானங்களுக்கு அமைய ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறை காலத்தில் நடைபெறும்.

ஐந்தாம், ஆறும் தரங்களுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பிரதான பாடத்தோடு துணைப்பாடமாக இன்னுமோர் பாடத்தில் பாடவிதானத்தில் குறிப்பிட்டுள்ளபடி தோற்றிச் சித்தியடைய வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் பிரதான, துணைப் பாடங்களைக் கவனமாகக் குறிக்கவேண்டும்.

இப்பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 17 – 01 – 1986 வரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய விண்ணப்பங்கள் விண்ணப்பக் கட்டணத்துடன் 10 ரூபா மேலதிகமாகக் கட்டிய வங்கிப் பற்றுச்சீட்டுடன் 24-01-1986 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ். கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவருமான திரு. எம். சிமியாம்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

### வாழைச்சேனையில் முகமூடித் திருடர்

மட்டக்களப்பு, டிச 12,

வாழைச்சேனையில் உள்ள சுருட்டுக் கடை ஒன்று முகமூடி அணிந்த ஐந்து பேரால்கொள்ளையிடப்பட்டது.

நகைகள்,பணம்உட்பட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன என்று புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை மட்டக்களப்பில் உள்ள புடைவைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சேலைகள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

### ஊழியர் நலன்புரி சங்கம்

பருத்தித்துறை,டிச. 12

மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் ஊழியர் நலன்புரிச்சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

### மினிபஸ் சாரதி பிணையில்

கிளிநொச்சி, டிச.12

ஆனையிறவில் மினிபஸ் மோதி இறந்த சதாசிவம் வேலுப்பிள்ளையின் மரணம்தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மினிவான் சாரதி சோ. விநாயகமூர்த்தி கிளிநொச்சி நீதிபதிதிரு.கே. பாலச்சந்திரனுல் இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சைக்கிளில் செல்லும் போது சதாசிவம்வேலுப்பிள்ளை மினிபஸ் மோதி மரணமானுர்.

மினிபஸ் கிளிநொச்சி கிராம சேவகரின் நேரடிக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

### கிளிநொச்சியில் இடையூறின்றி ஜி. சி.ஈ பரீட்சை

கிளிநொச்சி, டிச.12

கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சை எதுவித இடையூறு இன்றி நடைபெற்று வருகிறது.

### மருதங்கேணி வைத்தியசாலையில் குறைபாடுகள்

நாளையடி, டிச 12

மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையின் குறைபாடுகளை பருத்தித்துறை கிழக்குப் பகுதி பொது ஸ்தாபனங்களின் உறுப்பினர்கள் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து எடுத்துக் கூறியுள்ளார்கள்.

பிரசவ வார்ட், மருத்துவமாது மற்றும் சிற்றூழியர்களுக்கான விடுதி வைத்தியசாலை நீர் விநியோகத்திற்கான நீர்த்தாங்கி ஆகியன தற்போதையமுக்கியதேவைகளாகும் இத்தேவைகள் பற்றிய விபரங்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் அவரைச் சந்தித்த பிரதிநிதிகளால்எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

பருத்தித்துறைகிழக்கில் நாகர் கோவில் தொடக்கம் சுண்டிக் குளம்வரை உள்ள மக்களும் மாசார் பகுதி மக்களும் தமது சுகாதாரத் தேவைகளை நிறைவேற்ற இவ்வைத்திய சாலையையே நம்பியிருக்கவேண்டியுள்ளது.

### கடற்கரையில் கண்ட பொருள் வெடித்ததால் காயம்

நல்லூர், டிச. 12

குருநகர் பகுதியிலிருந்து இரணைதீவுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஜேசுதாசன் செபமாலை என்பவர் கடற்கரையில் காணப்பட்ட ஒரு பொருள் வெடித்ததனுல் காயம் அடைந்தார்.

யாழ் ஆஸ்பத்திரியில் தற்போது இவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி இரணைதீவு கடற்கரைக்கு இவர் மீன்பிடிக்கச் சென்றுர்.

அப்பொழுதுகடற்கரையில் காணப்பட்ட பால் பேணிபோன்ற ஒரு பொருளைக் கண்டு அதை காலால் தட்டினுர்.

அப்பொழுது அது திடீரென வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.


புத்தாண்டு மணக்க

அண்ணு கோப்பி

ஸ்தாபனத்தார் அளிக்கும்

வெகுமதிகள்

உங்கள் வாடிக்கைக் கடைகளில்

அண்ணு No. 1

கோப்பிகளை வாங்கி

பைக்கற்றுக்குள்ளிருக்கும் கூப்பன்களைக் கொடுத்து

வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

3 கிலோ பைக்கற்றுக்கு 1 எவர்சில்வர் கப்

2 கிலோ பைக்கற்றுக்கு 1 பிளாஸ்டிக் கப் & சோசர்

1 கிலோ பைக்கற்றுக்கு 1 பிளாஸ்டிக் கப்

500 கி. பைக்கற்றுக்கு 1 கோப்பி

1-12-85 முதல் 28-2-86 வரை முடியும் விற்பனைக்கே இப்பரிசுகள் வழங்கப்படும்.

வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ளவேண்டிய இடம்:

அண்ணு கோப்பிக் கடை

நவீன சந்தை — யாழ்ப்பாணம்,

கடிதத் தொடர்பு:

அண்ணு தொழிலகம் — இணுவில்.

ANNA

Drink anna COFFEE

**உதய சங்கற்பம்**

அநேக நோன்புகள நோற்றலின் பயனாகவே மனிதனாகத் தோன்ற முடியும்,
இறைவன், தாய்மை உருவிலன்றி, ஆத்மீக நோன்பிலன்றி அவனை காண முடியாது.

- அன்னை சாரதாதேவி -

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 12-12-85
தொலை பேசி: 24605 22073 த. பெ. 23

## லொறிச் சேவைகள் ஸ்தம்பிக்க இடம் தராதீர்

யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் இடையே நடந்து வந்த லொறிச் சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்டு விட்டது. யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம் மேற்கொண்ட ஒரு முடிவைத் தொடர்ந்தே லொறிச் சேவை நிறுத்தப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட போக்குவரத்து ஒன்றியம் தாம் லொறிச் சேவையை இடை நிறுத்திய தற்கான காரணத்தைப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறது.

தமது உறுப்பு ஸ்தாபனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று கடத்தப்பட்டுவிட்டது. அதற்குள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்தன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து வந்த யாழ்ப்பாண மக்களுக்கும் சொந்தமான பொருள்களே அந்த லொறிக்குள் இருந்தன. முறிகண்டியில் வைத்துக் கடத்தப்பட்ட லொறி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. திருப்பி ஒப்படைக்கப்படவும் இல்லை. லொறியும் பொருள்களும் கிடைக்கும்வரை லொறிச் சேவை இடைநிறுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் எல்லா விதத்தாலும் நசுக்கப்படும் காலம் இது அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடையாது கஷ்டப்பட நேரின் அதனைத் தாங்கள் செய்த சாதனையாகக்கருதிப் பெருமைப்படவும் பலர் தருணம் பார்த்து இருக்கிறார்கள். ரயில் சேவை ஒழுங்காக நடக்கும் சீர்முறை இல்லை. ஏதாவது நொண்டிச் சாட்டைக் கூறி அதனை அடிக்கடி ரத்துச் செய்கின்றனர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் வட பகுதி மக்களுக்குத் தேவையான பல பாவனைப் பொருள்கள் லொறிச் சேவைகள் மூலமே கிடைக்கின்றன. பல கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் அனுபவித்தும் எதிர்நோக்கியுமே லொறிச் சொந்தக்காரரும் பணியாட்களும் அந்தச் சேவைகளை நடத்துகின்றனர்.

லொறிச் சேவையையும் ஓர் அத்தியாவசிய சேவையாகக் கருத வேண்டும். அது ஸ்தம்பித்தால் பாதிக்கப்படுபவர்கள் எமது மக்கள் தான். பொருள் தட்டுப்பாடு, விலை உயர்வு ஆகிய பளுக்களை அவர்கள் மேலும் சுமக்க வேண்டும். ஏற்கனவே பல கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களின் முதுகு கூனிக் குறுகும் அளவுக்கு மேலும் பாரத்தை ஏற்றலாமா?

நெடுஞ்சாலைக் கொள்ளை முன்னரே இருந்த ஒரு தொல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிர்வாகம் சரிபட இயங்கிய வேளையிலும் நெடுஞ்சாலை வழிப்பறிகளும், கடத்தல்களும் கொள்ளைகளும் நடக்காமல் இல்லை.

ஆனால் இப்போதைய சூழ்நிலையில் குற்றவாளிகளை நிச்சயம் கண்டுபிடித்தாக வேண்டும். ஏனெனில் கொள்ளையர்களின், கடத்தல்காரர்களின் கை ஓங்கினால் மக்கள் பாதிக்கப்படும் வாய்ப்பு முன்னரை விட இப்போது அதிகம்.

சட்டத்தை அமுல் நடத்தி ஒழுங்கை நிலைநாட்டும் பொலீஸாரின் சேவை இப்போது வடக்கில் முற்றாக ஸ்தம்பித்து விட்டது. பொலீஸாரின் இடத்தை நிரப்பும் விதத்தில் அவர்களின் பணியை இளைஞர் இயக்கங்களே இப்போது செய்து வருகின்றன.

எனவே வடபகுதி மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகிவிட்ட லொறிச் சேவை சீராக நடக்க இயக்கங்களின் உதவி தேவை. இதனை ஒரு மக்கள் பணியாகக் கருதி முன்னுரிமை கொடுத்து லொறிக் கடத்தல், கொள்ளை என்பனவற்றை அவர்கள் தடுக்க வேண்டும்.

தாம் செய்யும் பல பணிகளுக்கு மத்தியிலும் தமக்கு அவப்பெயரை உண்டாக்க முனையும் சில சமூக விரோதக் கும்பல்களைக் கண்டுபிடிப்பது இளைஞர் இயக்கங்களின் தலையாய கடமை அல்லவா?

# உலகை அச்சுறுத்தி வரும் பயங்கர எய்ட்ஸ் நோய்

## மனிதனை நடைப்பிணமாக்கி உயிரைக் குடிக்கிறது

உலக நாடுகள் தற்போது எயிட்ஸ் என்று கூறப்படும் ஒரு பயங்கரமான புதிய வியாதியிடமிருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது.

எயிட்ஸ் ( AIDS — Acquired Immuno Deficiency Syndrome) என்ற புதிய நோய்க்கு இது வரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. இந்நோயைப்பற்றி அமெரிக்காவிலும்மேற்கு ஜெர்மனியிலும் தீவிர ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது.

பாலியல் சேர்க்கையின் காரணமாகவே இந்நோய் தோன்றுவதாகவும்பரவுவதாகவும்சொல்லப்படுகின்றன. இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களைப்பரிசோதித்து, அவர்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்த போது மேற்கூறப்பட்ட காரணம் உறுதிப்படுத்தப்பட்டது,

இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் 90 சதவீதத்தினர் மரணத்தைத் தழுவியது மக்களிடம் பீதியையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிரபல ஹொலிவூட் நடிகரான ஜொக்ஹட்சன் சமீபத்தில இந்நோயினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தார்.

ஆரம்பத்தில் அமெரிக்காவில் இந்நோயினால்

**தொகுப்பு: வில்வம் பசுபதி**

பலர் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தனர். சமீபகாலத்தில் ஐரோப்பிய நாடுகளிலும் இந்நோய் பரவியுள்ளது தெரியவந்துள்ளது. அமெரிக்காவில் மட்டும் 7157 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்துள்ளனர்.

இதுவரை இந்தக் கொடிய நோய் கீழ்க் காணும் நாடுகளில் பரவியுள்ளது.

பிரான்ஸ் — 392
கனடா — 323
மேற்குஜெர்மனி—300
இங்கிலாந்து — 255

சென்றமாதம் இந்தியாவில் ஒருவர் இந்நோயினால் பீடிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

பிரேசில் நாட்டில் கை அலங்கார ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் நாளுக்குநாள் உடல் மெலிந்து, சோர்வுற்றுக் காணப்பட்டார். அடிக்கடி வயிற்றோட்டம் இருப்பதாகக் கூறினார். வாடிக்கையாளர் அங்கு போவதைத் தவிர்த்தனர். அந்த ஊழியர் போகும் தனிப்பட்ட நீச்சல் குளத்தைப் பலரும் பகிஷ்கரித்தனர். எயிட்ஸ் நோயினால் அவர் பீடிக்கப்பட்டிருப்பார் என்ற பீதியே காரணம்.

இத்தாலியில் பொதுப் பூங்கா ஒன்றில் அலைந்து திரிந்த இளம்பெண் ஒருத்திக்கு அருகே போகப் பொலீசார் மறுத்துவிட்டனர் அவள் போதை வஸ்துப் பாவனையால் உடல் சோர்வுற்று இருந்தாள் என்பது பின்பு தெரியவந்தது.

எயிட்ஸ் நோய் மக்களிடம் எவ்வளவு பீதியை உண்டாக்குகின்றது என்பதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

இந்த நோயினால்பீடிக்கப்பட்டவர்களின் உடல் நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கின்றது.

ஐரோப்பிய நாடுகளின் பத்திரிகைகள் இந்த நோயின் கொடிய தன்மையையும் அது பரவும் வேகத்தையும் விபரித்து மக்களை எச்சரித்து உள்ளன. இது மக்களையும் மற்றைய நாடுகளையும் விழிப்புணர்ச்சியுடன் இருக்க உதவுகின்றது.

இந்த நோயைக் கட்டுப்படுத்தவும்,இது எப்படித் தோன்றிப் பரவுகின்றது என்பதை ஆராயவும் உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

வைத்திய நிபுணர்கள் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி இந்நோய்க் கிருமிகள் மூளையும், மூளைப் பகுதியையும் தாக்கி நோயாளியை நடைப் பிணமாக ஆக்கிவிடுகின்றன.

நோய்க்கிருமிகள் பரவுவதற்கு பாலியல் புணர்ச்சி குறிப்பாக தன்னினச் சேர்க்கை முக்கிய காரணம் எனக் கருதப்படுகின்றது. விலைமாதர்களும் தன்னினச் சேர்க்கையில் நாட்டம் கொண்டவர்களும் இந்நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுமல்லாது இவர்கள் மூலமாக இந் நோய் பலருக்குப் பரவுகின்றது.

உல்லாசப் பிரயாணிகள் மூலம் கணிசமான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் எமது நாட்டிற்கும் இந்நோய்க் கிருமிகள் இறக்குமதியாகாது தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது மிகவும் அவசிய மாகும்.

(நன்றி டைம்)

# மனித உரிமை மீறல் உள்நாட்டு விவகாரம் ஆகாது

## கருத்தரங்கில் உரை

காரைநகர் டிச. 12

மனித உரிமைகள் மீறப்படுவதை உள்நாட்டு விவகாரம் என்று சொல்லி விட்டு வாளா திருக்க முடியாது.

ஐ. நா. சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி காரைநகரில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு ஆ. நடராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் டாக்டர் ஆ. தர்மலிங்கம் தலைமையில் இக் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது.

திரு. ஏ. நடராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

1945 இல் முதன் முதலாக மனித உரிமைகள் பற்றிய கருத்து வெளியிடப்பட்டது. உலக சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கே மனித உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டால் அது உள்நாட்டு விவகாரம் எனக் கூறமுடியாது.

மனிதன் தனது சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்காகப் போராடித் தோல்வி கண்டது சரித்திரத்தில் இடையாது.

மக்களின் உள்ளார்ந்த சிந்தனையின் அடிப்படையில் சகல விஷயங்களிலும் சமத்துவம் ஏற்படும் போது தான் மனித உரிமைகளை நிலை நாட்ட முடியும்.

இப்படி அவர் கூறினார்.

வண.பிதா.அ ஜெயக்குமார் உரையாற்றுகையில் கூறியதாவது;

மனிதன் சுதந்திரமாக அனைத்தையும் ஆட்கொள்ளும் வகையில் இறைவன் மனிதனைப் படைத்தான். ஆனால் சில சந்தர்ப்பங்களில்மனிதன் மனிதனை மனிதனாக மதிக்கத்தவறிவிடுகிறான்.

எமது நாட்டில் இன்று மனித உயிருக்கு உத்தரவாதமில்லை. எமது மக்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நிலையிலேயோ உரிமையைக் கேட்கும் நிலையிலேயோ இல்லை.

யாராவது உரிமைகளைப் பெற்றுத்தரட்டும்; நாம் அனுபவிப்போம் என்ற நிலையே காணப்படுகிறது.

இப்படி அவர் கூறினார்.

இலங்கை சர்வோதய சேவா சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் சர்வோதயம் திரு வை. சுந்தரமூர்த்தி, மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திரு இ. சிவமணி யாழ்ரன் கல்லூரி உப அதிபர் திரு து. சேனாதிராசா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

### அளவெட்டியில் புற்றுநோய் ஆய்வு

காங்கேசன்துறை,டிச 12

அளவெட்டி தெற்கு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட புற்று நோய் ஆய்வு ஒன்றின் போது 60பேர் பரிசோதனைக் குட்படுத்தப் பட்டனர்.

அதில் 5 பேருக்கு புற்று நோயின் ஆரம்ப அறிகுறி இருந்தது கண்டு பிடிக்கபபட்டது.

அளவெட்டி சுகாதார பரிசோதகர் திரு. வீ. க. சிங்கராஜா, மருத்துவ மாது திருமதி. வி. மகாலிங்கம் ஆகியோர் அப் பகுதிச் சுகாதார நல தொண்டர்களின் உதவியுடன் இந்த புற்றுநோய் ஆய்வுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அளவெட்டி தெற்கு அடுவம் பற்றுக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 5பேருக்கு புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களை இது தொடர்பான வைத்திய பரிசோதனையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை தெரிவிக்கப் பட்டது.

### அறவழி பாலர் பாடசாலை

சாவகச்சேரி, டிச. 12

அறவழிப் போராட்டக் குழு ஜனவரி மாதம் முதல் 25 அறவழிப் பாலர் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்த இருக்கின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இப்பாடசாலைகளை அமைக்க குழு திட்டமிடப்பட்டுள்ளது.

## தனியார் வைத்திய கல்லூரி சிகிச்சை மண்டபத்துக்கு அத்திவாரக்கல்

யாழ்ப்பாணம், டிச.12

தனியார் வைத்தியக் கல்லூரியின் சிகிச்சைப் பிரிவுக்கட்டடத்துக்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் கடந்த திங்கட்கிழமை மூளாய் ஆஸ்பத்திரி வளவில் இடம் பெற்றது.

பேராசிரியர் சின்னத் தம்பி,யாழ் பல்கலைக் கழகத்தின் வைத்தியத் துறைப் பேராசிரியர் திரு. என். சரவணபவானந்தன் ஆகியோர் அத்திவாரக்கல்லை நட்டனர்.

சுகயீனம் அடைந்த நிலையிலும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச்சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தார் பேராசிரியர் சின்னத் தம்பி.

பேராசிரியர் சரணபவானந்தன் பேசுகையில் "வறிய குடும்பத்துமாணவர் வைத்திய மேற்படிப்பு மேற் கொள்ள இக் கல்லூரி நிர்வாகம் உதவ வேண்டும். சில இடங்களைஅவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கவேண்டும்'' என்று சொன்னார்.

வட இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர். கங்காதரன் பதிலளிக்கையில், "எமது சங்க சட்டதிட்டத்தில் வறிய மாணவருக்கு வைத்திய மேற்படிப்பு மேற்கொள்ள உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது'' என்று சொன்னார்.

டாக்டர் பிரான்சிஸ் சேவியர், டாக்டர் வாமதேவன் ஆகியோரும் பேசினர்.

செயலாளர் டாக்டர் பிலிப்ஸ் நன்றி சொன்னார்.

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி, டிச 12

தமிழினத்தின் சுபீட்சத்திற்காகவும் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவுவதற்காகவும் சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கணபதி மஹாயாகம் நடைபெற்றது.

ஆலய பிரதம குரு. சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் இதனைச் சிறப்புற நடத்திவைத்தனர்.

காலைமுதல் மாலைவரை இடம் பெற்ற இந்த யாகத்தின்போது பொது மக்கள் பெருமளவில் கூடி பிரார்த்தனை, கூட்டு வழிபாடு ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

*

நல்லூர், டிச.12

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் புதிய தேருக்கான "பவளக்கால் நடும் வைபவம்'' எதிர்வரும் வெள்ளிக்கிழமை 11.30 மணியளவில் நடைபெறும்.

இச்சித்திரத்தேர் நல்லைப் பெருமானின் அருளினாலும் அடியார்களின் பெருமுயற்சியினாலும்உருவாகிவருவது குறிப்பிடத்தக்கது.

*

நல்லூர், டிச.12

காரைநகர் மணற்காட்டு கும்பநாயகி மாரியம்பாள் ஆலய பரிவார மூர்த்தி ஜேஷ்ட கும்பாபிஷேகம் 15-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

# கிளிநொச்சியில் இராணுவ கெடுபிடி அதிகரிக்கின்றது

கிளிநொச்சி, டிச.12

கிளிநொச்சிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வந்து சென்ற பின்பு அதிகரித்துள்ள இராணுவக் கெடுபிடிகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு கிளிநொச்சி பிரஜைகள்குழுவிடம் கிளிநொச்சி மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 7-ஆம் திகதி கிளிநொச்சிக்குக் கண்காணிப்புக் குழுவினர் வந்து சென்ற பின்னர் எதிர்பாராத வண்ணம் இராணுவ ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி இரணைமடுச் சந்தி, பழைய பஸ்நிலையம் ஆகிய இடங்களில் சுமார் 15–க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப் பட்டனர்.

பரந்தன் பகுதியில் சுப்பிரமணியம் கிருபாகரன் என்ற பாடசாலைச் சிறுவன் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினார்.

மேற்கண்ட சம்பவங்களைச் சுட்டிக் காட்டிய கிளிநொச்சி மக்கள் அவ்வாறான அநீதிகள் நடைபெறுதிருக்க கிளிநொச்சி பிரஜைகள்குழுவினர்உடனடியாக மேலிடத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளனர்.



**பொய்யாமொழி**

குறள்:
விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

பொருள்:
வானத்தில் இருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவு உயிராகிய பசம்புல்லின் தலையையும் காண முடியாது.

## வித்தாரம்

முரளித்தம்பி! என்ன, நேற்றைக்கும் இண்டைக்கும் இடையிலை எவ்வளவு வித்தியாசம்.

கலியாணச் சாப்பாடெல்லே! பருப்புஞ் சோறும் ஒரு பிடிபிடிச்சிருக்கிறாய் எண்டது வெளிச்சமாய்த்தெரியுது உன்ரை முகத்திலை.

ஒண்டைவிட்ட சகோதரியின்ரை கலியாணம். ஐஞ்சு லட்சம் சீதனம் கொடுத்தவை. வெகு டாம்பீகமாய் நடத்தாமல் விடுவினமே.

இந்தக்காலத்திலைசனம் கஷ்டம் கஷ்டம் எண்டு சொல்லும். ஆனா வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டதும் இல்லாத காசு பணம் எங்கை இருந்து தான் வருகுதோ தெரியாது. வெளிநாடு போய் வந்த மாப்பிள்ளையளைக் கண்டதும் பொம்பிளைப் பிள்ளையளைப் பெத்தவையின்ரை தகப்பன்—தாய்மாருக்கு ஏதோ ஒரு பக்கத்தாலை புதையலோ கிதையலோ கிடைக்குதோ எண்டு நான் ஆச்சரியப்படுறது உண்டு.

எங்கடை பெடியங்கள் வெளிநாட்டுக்குப் போறதும் போறதுதான் இஞ்சகாணிவிலைகூடியிட்டுது. சீதன மட்டம் எக்கச்சக்கமா ஏறியிட்டுது. இப்பிடி எத்தினை விதமான ஏத்தம். அதை விடு...

வெளிநாட்டுக்குப் போய்வந்த பெடியங்களுக்குக் கொடுக்கிற சீதனத்தைக்கண்டு உள்ளூரிலை இருக்கிற பெடியள் என்ன விட்டு வைக்கிறுங்களே. தாங்களும் லட்சக்கணக்கா கேட்கிறுங்கள்.

சீதனத்தை வைச்சு ஒரு சின்ன 'பிஸினஸ்' செய்யலாம், அல்லாட்டாவேறஒருதொழிலைத்தொடங்கலாம் எண்டதுதான் அவையள் சொல்லுற ஞாயம்.

என்ன எப்படி இருந்தாலும் சீதனக் கொடுமை இந்த மண்ணை விட்டு அழியிறது பெரிய கஷ்டமடா தம்பி.

உந்தச் சீதனக் கொடுமையாலை எத்தனை குமருகள் 30, 35 வயசு வந்தும் கரைசேர ஏலாமல் இருக்குதுகள். நிலத்திலை மேடு பள்ளம் போலை, கடவுள் மனிதரிலையும் ஏழை, பணக்காரன் எண்டு படைச்சிட்டான். பணக்காரரிட்டை இருக்கிற சீதனம் ஏழையிட்டையும் இருக்குமோ!

சீதனக் கொடுமைக்கு பகிரங்க மரண தண்டனை இந்தியாவிலை விதிச்சது ஞாபகத்துக்கு வருகுது.

ஒரு மாமியார் தன்ரை மருமகளையும், ஒரு புருஷன் தன்ரை பெண்சாதியையும் கொலை செய்திருக்கினம் எண்டால் பாருங்கோவன். அதுவும் தீ மூட்டிக் கொலை செய்திருக்கினம்.

இந்தியச் சரித்திரத்திலை சீதனக் கொடுமைக்கு இப்பிடிக் கடுந் தண்டனை கொடுத்தது இது தானும் முதல் தடவை.

இருக்கிறவையளிட்டை, குடுக்க விரும்புறவையளிட்டை சீதனத்தை வாங்கிறதை யார்தான் தடுக்கிறது?

வகை வக்கில்லாத ஏழையளிட்டையும் சீதனம் தரும்படி கட்டாயப் படுத்துறது பெரிய அநியாயம்.

இந்த அநியாயம் எப்ப முடிவுக்கு வருமோ யாருக்குத் தெரியும்.

இப்ப புதுப் புதுச் சட்டம், தண்டனை எல்லாம் அறிமுகமாகிற காலம் எல்லே! அதனாலை சொல்லேலாது.

தொண்டைமான்

DIA
Dia Dia Dia
Dia for Electronics! - Watches
Any Work in Electronics
Visit: DIA
No. 6, Jubilee Bazaar,
(Beside Ranee Cinema)
JAFFNA.

# உதயன்

12 - 12 - 1985

டயா
டயா டயா டயா டயா
எவ்விதமான
எலக்ரோனிக் வேலைகளுக்கும்
நாடுங்கள்
டயா வோச் வேக்ஸ்
6, யுபிலி பஜார்,
(ராணி சினிமா அருகே)
யாழ்ப்பாணம்.

★ 15 வாகனங்களில் ஆயுதப்படையினர் வந்தனர்

# குண்டுவெடிப்பு, துப்பாக்கி வேட்டால் உருத்திரபுரம் கலங்கியது

## மக்கள் இடம்பெயர்வு சிலர் இறந்திருக்கலாம் என அச்சம்

— கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர்

கிளிநொச்சி, டிச 12. பதினைந்துக்கு மேற்பட்ட வாகனங்களில் ஆயுதப்படையினர் கிளிநொச்சியின் உருத்திரபுரம், கரடிப்போக்கு ஆகிய இடங்களுக்குச் சென்று தேடுதல் நடத்தியபோது குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிப்பிரயோகங்களும் அப்பிராந்தியத்தைக் கலக்கின.

கரடிப்போக்கில் ஆயுதப்படையினரின் வாகனங்கள் சென்றுகொண்டிருந்தபோது கண்ணிவெடியில் அவை சிக்கின.

இந்தக் கண்ணிவெடியின்போது ஒரு கவச வாகனம் சேதம் அடைந்ததாகவும், ஒரு பீரங்கி வாகனம் குடை சாய்ந்ததாகவும் நம்பப்படுகிறது.

நேற்று முன் தினம் (செவ்வாய்) நடந்த இச்சம்பவங்கள் பற்றி தெரியவருவதாவது:-

செவ்வாய்க்கிழமை மாலை உருத்திரபுரம் பகுதிக்கு மூன்று வீதிகளூடாக 15க்கு மேற்பட்ட கவசவாகனங்களில் இராணுவத்தினர் வந்தனர்.

அவர்கள் வந்து சிறிது நேரத்தில் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ந்து ஒரு மணி நேரம் கேட்டுக்கொண்டிருந்தன.

ஹெலிகொப்டர் வானத்தில் தாழப்பறந்துகொண்டிருந்தது. உருத்திரபுரம் பகுதிக்கு இராணுவம் வருவதைக் கேள்வியுற்ற மக்கள் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு சிதறி ஓடினர்.

கிளிநொச்சி நகரபோக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன. நகரம் வெறிச்சோடியது.

இதேவேளை கிளிநொச்சி, கரடிப்போக்குப் பகுதியில் செவ்வாய் மாலை கவச வாகனங்களிலும் நடந்தும் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இளைஞர் ஒருவர் பலியானார். மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார். பலர் சிறு காயங்களுக்கு ஆளானார்கள். இறந்தவரது சடலம் இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டது.

கைதானவர்கள் தனியார் வாகனம் ஒன்றில் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். சடலமும் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே 6ஆம் வாய்க்காலில் கண்ணிவெடி இடம்பெற்றது. காயமடைந்த இராணுவத்தினர் ஹெலிகொப்டர்களில் கிளிநொச்சி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கண்ணிவெடி இடம்பெற்ற இடத்தில் கவச வாகனம் சேதத்திற்குள்ளானது. மற்றுமோர் பீரங்கி வாகனம் குடை சாய்ந்தது.

இதனைத் தொடர்ந்து படைகளும், வாகனங்களும் மீண்டும் முகாமிற்கு திரும்பமுடியாத நிலையில் நேற்று நண்பகல்வரை சம்பவ இடத்திலேயே நிலைகொண்டிருந்தன.

தேடுதலின்போது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதால் வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் மரணமானார்.

பொதுமக்கள் வயல்களிலும், காடுகளிலும் தஞ்சம் அடைந்தனர். இறந்தவர்களது சடலங்கள் காணப்படுவதாகவும், இரண்டு வீடுகள் சேதமாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பெரியண்ணன் பழனிச்சாமி என்பவர் (48 வயது) வயலில் வேலை செய்துகொண்டிருந்த சமயம் சூட்டுக் காயத்திற்குள்ளாகி மறுநாள் புதன்கிழமைவரை வயலில் கிடந்தபின்னர் நண்பகல் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து கிளிநொச்சி, கனகபுரம், திருநகர், ஜெயந்திநகர், உருத்திரபுரம் மக்கள் அச்சம் காரணமாக தூர இடங்களை நாடியவண்ணம் உள்ளனர்.

## இரவல் மோதிரம் யமனாகியது

### திருநெல்வேலியில் பரிதாபம்

நல்லூர், டிச. 12. திருநெல்வேலியைச் சேர்ந்த இளம் பெண், நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இவரின் மரண விசாரணையை யாழ்ப்பாணம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார். இறந்தவர், தனது சிநேகிதியிடம் இருந்து வைரக்கல் மோதிரம் ஒன்றை இரவல் வாங்கி இருந்தார்.

ஒரு நாள் இவர் மோதிரத்தை கையில் அணிந்து கொண்டு தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு வந்தார். அச்சமயம் மோதிரத்தில் பதிக்கப் பட்டு இருந்த வைரக்கல் காணாமற்போனது தெரியவந்தது.

'ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் நான் வாங்கித்தருகின்றேன்' என்று இறந்தவர் சிநேகிதியிடம் சொன்னார்.

ஆனால் சிநேகிதி இறந்தவரின் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டார்.

அம்மா இறந்தவரைக் கண்டித்தார். மனம் வேதனை அடைந்து இறந்தவர் தற்கொலை செய்துகொண்டார்.

இத்தகவல்கள் மரண விசாரணையில் வெளிவந்தன.

மரணவிசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ரூபவாஹினி

12-12-85

மாலை

5-00மணி — செய்திகள்
5-05 — பீட்டில்ஸ் கார்ட்டூன் தொடர்
5-30 — கார்ட்டூன் (சிங்களம்)
6-00 — 1986 உலக சிறுவர் அறிக்கை (விவரணம்)
6-30 — செய்திகள் (தமிழ்)
7-00 — கல்வி நிகழ்ச்சி
7-25 — 'ரஸ கலஸ' (கலை)
8-00 — செய்திகள் (சிங்களம்)
8-25 — டெலி டிராமா (சிங்களம்)
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-30 — கலைஞர்கள், அவர்களின் படைப்புகள் அறிமுகம்.
9-55 — யுத்தத்தில் உலகம்
10-55 — ஒளிபரப்பு முடிவு

### விற்பனைக்கு வலம்புரிச் சங்கு

இலங்கையில் லட்சுமி கடாட்சம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை, ஆராதனை செய்வதற்கும் பாவிப்பதற்கு உகந்த வலம்புரிச் சங்கு உடன் விற்பனைக்கு உண்டு. தாஸ் மாணவர் அரப்பணி மன்றம் 59. மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, கொட்டடி

## தமிழ்நாடு ஆசிரியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

சென்னை, டிச. 12. தமிழ் நாட்டில் ஆசிரியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பின் போது வேலை நிறுத்தத்தைக் கைவிட இணக்கம் ஏற்பட்டது.

ஆசிரியர்களின் பிரச்சினைகளை ஆராய தனிநபர் கமிஷன் ஒன்றை அமைப்பதாக எம். ஜி. ஆர். உறுதி அளித்தார்.

சேவைக்கால நிபந்தனை உட்பட பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு ஆசிரியர்கள் கடந்த சில தினங்களாக போராட்டம் நடத்திவந்தது தெரிந்ததே.

## சுன்னாகத்தில் கழிவு எண்ணெய் கடத்தல்

யாழ்ப்பாணம், டிச. 12. சுன்னாகம் மின்சாரநிலையத்தில் இருந்த கழிவு எண்ணெய்யை இனந்தெரியாத நபர்கள் கொள்ளையிட்டனர்.

லொறி ஒன்றில் வந்த இக் கோஷ்டி கழிவு எண்ணெய் இருந்த பரல்களை ஏற்றிச் சென்றது என்று பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

இனந்தெரியாத இன்னொரு கோஷ்டி மல்லாகம் உப அபிவிருத்தி நிலையத்தில் இருந்த வெற்றுத் தார்ப் பீப்பாக்களை டிராக்டர் ஒன்றில் ஏற்றிச் சென்றதாகப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இன்று 'நெருப்புத்தினம்'

யாழ்ப்பாணம், டிச. 12. 12-12-1985 நெருப்புத் தினமாக பிரகடனம்.

இப்படி ஈழம் செய்திப் பலகையில் கூறப்பட்டுள்ளது.

செய்திப் பலகையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இயக்கப் படுகொலைகளால் போராளிகள், பொதுமக்கள், போராட்ட ஆதரவு சக்திகள் மத்தியில் பொருமிக் கிடந்த கோபஉணர்ச்சிகளை நெருப்புத் தினமாக பிரகடனம் செய்கின்றோம்.

அராஜகத்துக்குச் சாவு மணி, இயக்கப் படுகொலைக்கு முற்றுப் புள்ளி, —இப்படி ஈழம் செய்திப் பலகையில் கூறப்பட்டுள்ளது.

## மகாதேவா .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அபிலாஷைகளையும் பயன்படுத்தி சிரமதானம் மூலம் இவ்வேலைகளை நிறைவேற்ற திரு. இராமகிருஷ்ணன் பெரும் முயற்சி எடுத்து, அதில் வெற்றியும் கண்டார். அவரின் தலைமையிலேயே சிரமதானப் பணிகளுக்கு என்று ஒரு குழு ஆரம்பிக்கப்பட்டது.

பொதுமக்கள் கலந்து கொண்ட சகல சிரமதானப் பணிகளும் இந்த குழு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டன. 70 நாட்கள் வரை இச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

3 லட்சம் ரூபா பெறுமதியான வேலைகள் இச் சிரமதானம் மூலம் இடம்பெற்றன என்று கணக்கிடப்பட்டாலும், உண்மையில் மதிப்பிட முடியாத அளவு சேவை சிரமதானம் மூலம் இடம்பெற்றது.

## மூதூரில் சூடு தமிழர் ஒருவர் பலி

திருகோணமலை, டிச 12. மூதூரில் துப்பாக்கிச் சூட்டுக்காளாகி ஒரு தமிழர் மரணமானார்.

இறந்தவர் மூதூர்ப் பட்டினத்தில் வசித்து வந்த கப்ரியான் பாய்வா என்பவர். வயது 35. திருமணமானவர் இரண்டு குழந்தைகளின் தந்தை.

மூதூர் பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் சடலம் மூதூருக்கும் பட்டித்திடலுக்கும் இடையில் 64 ஆம் மைலில் வீதியில் கிடந்தது.

மூதூர்ப் பொலீஸ் பொறுப்பதிகாரி ஆர். பி. ராஜபக்ஷ சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

ஆயுதப் படையினருடன் சேர்ந்து சம்பவதினம் மாலை ரோந்து சென்றேன். 64 ஆவது மைல் அண்மியதும் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அது கிறனேட் வெடி போன்று இருந்தது.

நாங்கள் திரும்பிச் சுட்டோம். பின்னர் சென்று பார்த்தபோது இறந்தவரின் பிரேதம் வீதியில் கிடந்ததைக் கண்டேன். சடலத்தை எடுத்துவந்து மூதூர் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தேன். இறந்தவர் ஒரு போராளி.

—இப்படி பொலிஸ் அதிகாரி சொன்னார்.

மரணவிசாரணை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்றது.

நியாயமான கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## வைப்பீட்டுக் கணக்குகளை தொடருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 12. இலங்கை வங்கிக் கிளைகளில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வைப்பீட்டுக் கணக்குகளை தொடர்ந்து நடத்த யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அனுமதி கோரியுள்ளன.

அண்மையில் மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாக மக்கள் மறியல் போராட்டம் நடத்தியதால் அவை இயங்கவில்லை. அதைத் தொடர்ந்து மக்கள் வங்கிக் கிளைகளில் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்கள் வைப்புக் கணக்குகள் நடத்தலாம் என்ற விதி தளர்த்தப்பட்டது.

மக்கள் மறியல் போராட்டம் நடத்திய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத நிலையில் இந்த அனுமதியைத் தொடர்ந்து வழங்குமாறு யாழ். மாவட்டகூட்டுறவு இயக்கத்தினர் கூட்டுறவுத் திணைக்களத்தைக் கோரியுள்ளனர்.

## மனித உரிமைகள் தினக் கூட்டம்

நல்லூர், டிச 12. மனித உரிமைகள் தினம் கரிநாளாக தமிழ் மகளிர் அவையினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

இது சம்பந்தமான பொதுக்கூட்டம் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அகதிகள் முகாம் முன்றலில் மாலை நடந்தது.

மகளிர் அவைத் தலைவர் செல்வி குருசாமி மேகலா தலைமை வகித்தார்.

வன்செயல்களால் உயிரிழந்த விடுதலைப் போராளிகள், அப்பாவிப் பொதுமக்களுக்குமாக 2 நிமிட மௌனஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது.

அவைச் செயலாளர் செல்வி. கு. மஞ்சுளா, திருவாளர்கள் ந. வசந்தகுமார், மகேஞ்கரன், த. நியூட்டன், இரா. முருகையா ஆகியோர் உரையாற்றினர்.

## விளையாட்டரங்கு

7 பேர் கொண்ட உதைபந்தாட்டம்

## பொற்பதி சாம்பியன்!

### இறுதி நேரத்தில் சளைக்காமல் அபார ஆட்டம்

(விளையாட்டு செய்தியாளர்:- சண். ஜோன்சன்)

யாழ்ப்பாணம், டிச. 12. யாழ். உதைபந்தாட்டலீக் நடத்திய 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

நேற்று நடைபெற்ற சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் நேரடியாக மோதின.

எனினும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதால் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 6 புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது.

5 புள்ளிகளைப் பெற்ற கிறீன்பீல்ட் அணி இரண்டாம் இடத்தையும், சென். அன்ரனிஸ் அணி 4 புள்ளிகளைப் பெற்றதால் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் விறுவிறுப்பாகத்தொடங்கிய நேற்றைய ஆட்டத்தில் இடைவேளையின் முன்னர் எந்த அணியாலும் கோல் போட முடியவில்லை.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு ஆட்டத்தில் முன்னணிக்கு வந்தது.

ஆட்டம் இறுதிக் கட்டத்தைஅடைந்துகொண்டிருக்கும்போது பொற்பதி வீரர்கள் உஷாரானார்கள்.

ஆட்டம் முடிவடைய மூன்று நிமிடங்கள் இருக்கையில் பொற்பதி விளையாட்டுக் கழக வீரர்கள் அசுர வேகத்தில் இரண்டு கோல்களை தொடர்ந்து போட்டு கோல் எண்ணிக்கையை சமப்படுத்தினார்கள்.

நேற்று நடைபெற்ற இந்த விறுவிறுப்பான ஆட்டத்திற்கு திரு. குமரையா மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

பொற்பதி விளையாட்டுக் கழக அணிக்கு திரு. எஸ். சிவகுரு பயிற்சியாளராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மலேசியாவில் கராட்டி

கொழும்பு, டிச. 12. மலேசியாவில் நடைபெறும் ஆசிய பசிபிக் கராட்டி சம்மேளனத்தின் ஆறுவது வருடாந்த கராட்டி சுற்றுப் போட்டியில் இலங்கை அணியும் பங்குபற்றும்.

இலங்கை அணியின் சார்பில் எட்டு கராட்டி வீரர்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகிறார்கள்.

18 வயதுக்கு உட்பட்டோர்

## மினிபஸ்களில் வேலை செய்வதற்குத் தடை

கொழும்பு, டிச. 12. பதினெட்டு வயதுக்குட்பட்ட எவரும் இனிமேல் மினிபஸ்களில் வேலை செய்யமுடியாது.

இதற்கு வழிசெய்யும் விதத்தில் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

தனியார் பஸ்சேவைகள் பிரதி அமைச்சர் திரு. பி. கவிரத்ன நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

புதிதாக அமுலுக்கு வரவிருக்கும் ஒழுங்குவிதிகள் குறித்தும் ஏற்பாடுகள் குறித்தும் அவர் விளக்கமளிக்கிறார்.

அவை யாவன:-

18 வயதுக்குட்பட்டவர்கள் மினிபஸ்களில் வேலை செய்ய முடியாது.

● மினிபஸ்களின் மிதிபலகைகளில் பயணம் செய்தல் முற்றாகத் தடை செய்யப்படும்.

● மினிபஸ்கள் வீதியில் ஓடும்போது எந்நேரமும் அவற்றின் கதவுகள் மூடப்பட்டிருக்க வேண்டும்.

● 27 பயணிகளுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்யக்கூடிய மினிபஸ்களை இறக்குமதி செய்யவே இனிமேல் அனுமதி வழங்கப்படும்.

மினிபஸ் சாரதிகளுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் சாரதி பயிற்சி வழங்கப்படும்.

### கருத்தரங்கு இன்று

நல்லூர், டிச. 12. சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறும்.

வண. பிதா ஜெயசீலன் கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார்.

பேராசிரியர் சா. சிவத்தம்பி, பேராசிரியர் கு. நேசையா ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்

## யாழ்ப்பாணத்தில் தனி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விழுக்கு மூன்று கண்கள் இல்லை. எல்லாரும் ஒரே மாதிரித்தான். ஆகவே எங்களுக்குள் ஏன் பேதம்?

தமிழர்கள், முஸ்லிம்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் ஒரு தாய் மக்கள் போல் இந்த நாட்டில் வாழ்ந்து வருபவர்கள்.

நாம் அனைவரும் சகோதரர்களாகவே வாழ்வோம்; வாழவும் வேண்டும்.

தமிழர் தம் உரிமைகளைத் தான் கேட்கின்றனர். அதில் தவறு ஏதும் இல்லை.

முஸ்லிம்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த உரிமை உண்டு. எமக்குள் வேறுபாடுகள் இருக்குமானால் அவற்றை நாம் பேச்சு மூலம் நீக்கிக்கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று பலரும் கருதுகின்றார்கள். என்னால் அதை ஏற்க முடியாது.

யுத்தங்கள் அனைத்தும் தீயன. சமாதானமே சிறந்தது. இப்படி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பெஞ்சமின் பிராங்க்ளின் சொன்னார்.

தினம் ஒன்றுக்கு 1கோடி 70 லட்சம் ரூபா பாதுகாப்புக்காகச் செலவிடப்படுகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் நாட்டின் பொருளாதாரமே சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வடபகுதித் தமிழருக்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

கிழக்கிலும் இதே முறை வரவேண்டும். இப்படி வழங்கினால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மகிழ்ச்சி அடைவார்.

இப்படிச் செய்வது தான் எமது சகோதர உணர்வை வெளிக்காட்ட சிறந்த வழி — இப்படி டாக்டர் தஹநாயக்கா சொன்னார்.

## இராணுவ...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த இரு வருடங்களாக தீவிர நடவடிக்கைகள் எடுத்து—

ஓரளவுஜனநாயகத்தை புகுத்தும் முயற்சியில் வென்றிருக்கிறோம். ஒவ்வொரு மட்டத்திலும் ஜனநாயக அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

முழுஜனநாயக அமைப்பை ஏற்படுத்துவதற்கு இராணுவச் சட்டத்தை நீக்கவேண்டும். இதற்கான நடவடிக்கைகள் அடுத்துவரும் தினங்களில் மேற்கொள்ளப்படும்.

ஜனவரி முதலாம்திகதி பாகிஸ்தான் முழுக்க முழுக்க ஜனநாயக நாடாக இருக்கும்.

இப்படி அவர்பதிலளித்தார்.

"பாகிஸ்தானுடைய அணுசக்தித் திட்டம் பற்றி இந்தியா அடிக்கடி ஆட்சேபமும் கவலையும் தெரிவித்துவந்திருக்கிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?" என்று அவரிடம் வினா எழுப்பப்பட்டது.

அணு ஆயுத உற்பத்தியைப் பொறுத்தவரை இந்தியா பாகிஸ்தானிலும் விட தகுதியும் திறமையும் மிக்கது:

ஆகவே இந்த விடயத்தில் இந்தியா குறித்து பாகிஸ்தான் தான்கவலைப்படவேண்டும். பாகிஸ்தான் குறித்து இந்தியா கவலைப்படத் தேவையில்லை. இப்படி அவர் பதிலளித்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: கூட்டுறவு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்டு திகதி: 12-12-1985